மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தொழிற்சாலையின் பங்கு அந்த வீடு கட்டுவதில் இருக்கிறது. அதுமட்டும் அல்லாமல், இந்த வீடுகள் எந்தெந்தத் தொழிற்சாலைகளிலே பணியாற்றுகிறார்களோ அந்தத் தொழிலாளர்களுக்காகக் கட்டப்படும் வீடுகள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், திரு. வி. க. நகரில் பக்கிங்காம் ஆலைத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், அதற்காக பக்கத்தில் குடியிருப்பு இருக்கிறது. நாளைக்கு அந்தத் தொழிலாளர்கள் அந்தத் தொழிற்சாலையை விட்டுப் போய்விட்டால் அதற்குப் பிறகு வரும் தொழிலாளர்கள் அங்கே வாழ வேண்டுமென்பதற்காக அந்தக் குடியிருப்புகள் நிரந்தரமாக விற்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட குடியிருப்புகள் விற்கப்படக் கூடாது என்ற முடிவு சென்னையிலே கூடிய வீட்டு வசதி அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டிருக்கிறது.

Houses constructed in Mambalam Tank Bund area

*194 *Q.*—Thiru K. M. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the flats constructed under the Hire Purchase Scheme at Mambalam Tank Bund in Division No. 109 in Madras City have not been allotted to the slum dwellers in the area; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, (அ) & (இ) மாம்பலம் ஏரிக்கரைப் பகுதியில் மட்டுமல்ல, எல்லாக் குடிசை வாரியத் திட்டங்களிலும் தவணை முறையில் குடிசைவாழ் மக்களுக்கு வீடுகளை ஒதுக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அந்தப் பகுதி வாழ் மக்கள் தவணை முறைக்கு முன்வராவிடில் குடிசை வாரிய விதிகளுக்குட்பட்ட மற்ற ஏழை மக்களுக்கும் இந்தச் சலுகை நீட்டிக்கப்படும். மாம்பலம் ஏரிக்கரைப் பகுதி திட்டம் குடிசை மாற்று வாரியம் துவக்கிய முதல் திட்டமாகும். அண்ணா சாலையை ஒட்டியுள்ள முன்வரிசைப் பகுதியில் 128 குடியிருப்புகள் தவணை முறைக்கும், வாடகைக்கு என்று உள்ளே 392 குடியிருப்புகளும் கட்டப்பட்டன. ஆரம்பகாலத் திட்டமாதலால் தவணை முறையில் நன்மையை உணராததால் அந்தப் பகுதிவாழ் மக்கள் வாடகைக் குடியிருப்புகளையே நாடினர். அதனால் மேற்கண்ட 128 குடியிருப்புகளும் தவணைமுறைக்கு விரும்பிய இயலாதோருக்கு அளிக்கப்பட்டன.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is the Hon. Minister aware that many of the persons who have applied for the Hire Purchase Scheme in Eri Karai have been allotted houses in Korattur instead of in 'Eri Karai'? So, will he examine the matter and see that justice is done to those who are staying in that particular area?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னது போல 128 குடியிருப்புகள் தவணை முறையில் விற்கப் பட்டிருக்கின்றன. யார் யார் கேட்டார்கள் என்ற புள்ளி விவரம் என்னி டத்தில் இல்லை. அப்படி ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, வாடகைக்கு விடுவதில் முன் பணம் கட்டச் சொல்வதனால் தகராறுகள் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இப்படி வாடகைக்கு இருப்பவர்களை முன் பணம் ரூ. 500 கட்ட வேண்டும் என்று சொல்வதாகக் கேள்விப்படுகிறோம், இது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட முறையில் பணம் வசூலிக்கப்படுகிறதா என்ற குறிப்பு என்னிடத்தில் இல்லை. வீடுகளைத் தவணை முறையில் வாங்குகிறவர்களுக்குத் தருகிற புதிய திட்டத்தை சென்னை நகரில் பல பகுதிகளைத் தேர்ந்தெடுத்து செயல் படுத்தி வருகிறோம். ஒருவர் தரைப் பகுதிக்கு 40 ரூபாய் வீதம் தவணையாக 25 ஆண்டுகள் செலுத்தி வந்தால் அவருக்கு அது தரப்பட்டு விடுகிறது. முதல் மாடியில் இருப்பவர்கள் 35 ரூபாய் வீதம் செலுத்த வேண்டும், இரண்டாவது மாடியில் இருப்பவர்கள் 30 ரூபாய் வீதமும், மூன்றாவது மாடியில் இருப்பவர் கள் 25 ரூபாய் வீதமும் செலுத்தி வந்தால் அவர்களுக்கு அது சொந்தமாகி விடுகிறது. இன்றைக்கு இப்படிப்பட்ட திட்டம் துவக்கப்பட்டு, பல ஏழை மக்கள் பயன் அடைந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, தவணை முறையில் சொந்த மாக்கிக் கொள்கிற இல்லங்களில் குடி போகிற தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்களுக்கிருக்கிற 18 சதவீத விகிதாசாரப்படி அளிக்கப்படுகிறார்களா என்று பரிசிலனை செய்கிற அளவிற்கு அரசிடம் குறிப்பு உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அந்தந்தப் பகுதியில் கட்டப்படுகிற வீடுகள் அந்தந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. விகிதாசார அடிப்படையில் பார்த்தாலும் தாழ்த்தப் பட்ட மக்களுக்குத்தான் அதிகம் இருக்கும். அங்கத்தினருக்கு வேண்டுமானால் விகிதாசாரம் எவ்வளவு என்பதை பின்னால் தெரிவிக்கிறேன் இப்போது என்னிடம் விவரம் இல்லை. ஆனால் 18 சதவிகிதத்திற்கு மேல் தான் தாழ்த்தப் பட்ட மக்களைப் பொறுத்த வரை விகிதாசாரம் இருக்கும். ரூபாய் 500-ஐ அவர்களும் முன் பணமாக இப்படிப்பட்ட தவணை முறையில் சொந்தமாக்கிக் கொள்ளும் வீடுகளுக்குக் கட்ட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

State Board for Handicapped.

*195. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that a State Board for physically handicapped has been set up; and

(*b*) if so, what are its functions?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ) ஆம்; "ஊனமுற்றோருக் கான மாநிலக்குழு" என்பதே அதன் சரியான பெயர்.

(இ) இக் குழுவின் பணிகள் வருமாறு:

(i) தமிழ்நாட்டிலுள்ள உடல் ஊனமுற்றோர், குறிப்பாக பார்வை யற்றோர், செவிட்டு—ஊமையர், கைகால் இழந்தவர்கள், மனவளர்ச்சி குன்றி யவர்கள், தொழு நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் அல்லது ஊனத்துடன் குணமடைந்தவர்கள் ஆகியோருக்குப் புதுவாழ்வு அளிக்கும் பிரச்சினையின் அளவைக் கண்டறிதல்;

(ii) அரசுடன் கலந்தாலோசித்து உடல் ஊனமுற்றோரில் பெரும் பான்மையினர் வாழ்க்கை நிலையை உயர்த்துவது, முக்கியமாக மருத்துவம், தொழில், சமூக மறுவாழ்வு வகையில் அவர்களின் நிலையை உயர்த்தும் நோக்கம் கொண்ட பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தல்;

(iii) உடல் ஊனமுற்றோருக்குள்ள வேலைவாய்ப்புக்களை கண்டறி வதிலும் அவர்களைக் கூடிய விரைவில் பணியிலமர்த்தவும் வேலை வாய்ப் பகங்களுக்கு உதவி புரிதல்;